# e-Learning Programme - 2020

**Grade - 11** | **Assignment - 01** | **Tamil Language**

பின்வரும் செயலட்டையின் எல்லா வினாக்களுக்குமான விடைகளை ஒப்படையாக தயாரிக்குக.

சுருக்கமான விடை எழுதுக.

1. "யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார் கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும்"
   அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உவமானங்கள் எவை?
   ஆ) நண்பொரீஇ என்பதன் பொருள் யாது?

2. "பூத்த ஜோதி வதனம்திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்"
   அ) இங்க உவமையணி ஏற்ற தொடர் யாது?
   ஆ) புலன்கள் எவை?

3. "வெங்கட்பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப்பிறைக்கும் விழிவேலே"
   அ) இங்கு இடம் பெற்றுள்ள அணியாது?
   ஆ) கரும்பிறை என்பது யாரைக்குறிக்கிறது?

4. "மாணவர்களுக்குப்பாடம் சொல்லுகிற போது மாத்திரம் அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம்"
   அ) இவ்வாறு மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடப்பவர் யார் ?
   ஆ) ஆவாகனம் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

5. " வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை நாவூறு வராமற் காரும் ஐயனாரே"
   அ) இப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் யாது?
   ஆ) நாவூறு என்பதன் பொருள் யாது?

6. "இன்துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்"
   அ) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டது?
   ஆ) இங்கு மூத்தான் என்பது யாரைக்குறிக்கிறது?

7. " அவ்விரக்கம் இலாளையும் தன் நல் கையின் வணங்கினான்"
   அ) இங்கு இரக்கம் இலாள் என்று குறிப்பிடப்படுபவள் யார்?
   ஆ) அவ்வாறு குறிப்பிடக்காரணம் யாது?

8. " உங்களுக்கு எப்படி வேண்டும் ? வலதுகை தூண்டிலா? இடதுகை தூண்டிலா? அல்லது இடதுகையா?"
   அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது ?
   ஆ) யாருக்கு கூறப்பட்டது?

9. "கானவர்கள் விழியெறிந்து வானவரையழைப்பர் கவனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்"
   அ) கானவர்கள் ஏன் வானவரை அழைக்கின்றனர் ?
   ஆ) காயசித்தி என்பது எதனைக்குறிக்கிறது?

10) " உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ் செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்"
   அ) உயிருடன் சென்ற ஒருமகள் யார்?
   ஆ)இங்கு இடம் பெற்றுள்ள இருபாத்திரங்களும் இடம்பெற்ற இலக்கியம் யாது?

11) “ மதியிழந்து தன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்”

அ)இங்கு அருந்தவன் என குறிப்பிடப்படுபவர் யார் ?

ஆ) இப்பாடலை பாடியவர் யார்?

12) “தச்சன் செய்த சிறு மாவையம் ஊர்ந்து இன்புறார் ஆயினும் கையின் ஈர்த்து இன்புறூஉம் இளையோர்”

அ) தச்சனால் செய்யப்பட்ட விளையாட்டுப்பொருள் யாது?

ஆ) அதனைக்கொண்டு மகிழ்ச்சியடைவோர் யார்?

13) “பெரிது இனிது பேதையர் கேண்மை பிரிவின் கண் பீழை தருவது ஒன்று இல்”

அ) இங்கு ஒருவருக்கு துன்பம் தரும் விடயமல்லாதது எதுவெனக்கூறப்படுகிறது?

ஆ) யாருடைய நட்பு இனிமையானது ?

14. “எங்கள் வீடு ஒரு விஞ்ஞானத்துள்ளல் துள்ளி முன்னேறிக் கொண்டிருந்தது”

அ)விஞ்ஞானத்துள்ளல் என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

ஆ)வீடு வேகமாக முன்னேறிச் செல்வதற்கான காரணம் யாது?

15 “முழங்குதிரைப் புலனருவி கழங்கெடுத்தாடும்”

அ) இங்கு குறிப்பிடப்படும் அருவி எங்கு அமைந்துள்ளது?

ஆ) இங்கு குறிப்பிடப்படுள்ள விளையாட்டு எது?

16. “நெடுநீர்க்குட்டத்துத் துடும்மெனப்பாய்ந்து குளித்து மணற்கொண்ட கல்லாவிளமை”

அ) இங்கு இளமைக்காலத்தில் செய்யப்பட்டதாகக் கூறப்படும் செயல்கள் எவை?

ஆ)இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

17. “ பதியிழந்தனம் பாலனையிழந்தனம்”

அ) இங்கு பதியை இழந்தவன் யார்?

ஆ) இப்பாலடியில் கூறப்படும் பாலன் யார்?

18. “ஊதிப்படிச்சி ஊர்புகழ வாழ்ந்தாலும் ஏழைக்கு செய்த தீங்கை அல்லா எள்ளளவும் ஏற்க மாட்டான்”

அ) அல்லாஹ் மன்னிக்காத செயல் எது?

ஆ) இப்பாடல் எப்பிரதேசத்திற்குரியது?

19. “ஊனமேயான ஊனிடையிருக்கும் உயிரினைத் துறந்து பூணாம் மானமே புரப்ப”

அ) இவ்வாறு கூறியவன் யார்?

ஆ) அவனது இலட்சியம் யாது?

20. “உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணும் அறுசுவை போல் தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்”

அ) இங்கு அறுசுவை உணவாக உண்ணப்படுவது எது?

ஆ) பட்டுத்துணிக்கு இணையாகக் கூறப்படும் ஆடை எது?

( 20 X 2 = 40)

## பகுதி 2

ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

1) திருக்குற்றாலக்குறவஞ்சியில் ,

அ) நாட்டுவளம்

ஆ)குற்றால மலை வாழ் மக்கள் , அங்குள்ள உயிரினங்களின் செயற்பாடுகள் என்பன விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

2) பேதைமை அதிகாரத்தில் ,

அ) பேதையரின் இயல்புகள்

ஆ)பேதைமை கொண்டோரின் செயல்களின் விளைவுகள் என்பனவற்றை விளக்குக.

3) கம்பியூட்டர் சிறுகதையில் ,

அ) கணணியின் வருகையால் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆ) ஆசிரியர் கையாண்டுள்ள உத்திகள் என்பவற்றை விளக்குக.

4) நாட்டார் பாடல்களில் ,

அ) ஏர்ப்பாடலில் கூறப்படும் பொதுநலக்கருத்துகள்

ஆ) காதற்பாடலில் காதலன் காதலி மேல் கொண்டுள்ள அன்பு என்பன வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

5) சங்கப்பாடலில் ,

அ)தலைவியின் நிலை

ஆ)கையாளப்பட்டுள்ள அணியின் பொருத்தப்பாடு என்பனவற்றை விளக்குக.

6) நாவலர் எழுந்தார் கடடுரையில் ,

அ)கூட்டத்தில் நிலவிய வாதப்பிரதிவாதங்கள்

ஆ)நாவலரின் ஆர்வம் என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

7)பாரதியார் சுயசரிதை ,

அ)காதல் உணர்வும் காத்திருப்பும்

ஆ) விரும்பியதைப் பெற கூறும் வழிகள் என்பனவற்றை விளக்குக.

8) தனிப்பாடலில் ,

அ)சீதக்காதியின் வள்ளல் தன்மை

ஆ)காளமேகப்புலவரின் கவித்திறன் என்பனவற்றினை விபரிக்குக.

9) குகப்படலத்தில் ,

அ) குககனின் வீரம்

ஆ) கைகேயியின் கொடுந்தன்மை என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

10) இலட்சியமும் சம நோக்கும் கட்டுரையில் ,

அ) இலட்சிய வாழ்வின் அவசியம்

ஆ)இலக்கியங்கள் காட்டும் இலட்சிய வாதிகள் என்பவற்றை விளக்குக.

( 6 X 10 = 60 புள்ளிகள்)